ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

11,655 — 1959 ජනවාරි 30 වැනි සිකුරාදා — 30.1.1959

11,655 ம் இலக்கம் — 1959 ம் ஆண்டு தை மாதம் 30 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I: தொகுதி (II)—விளம்பரங்கள்

## பரீட்சையும் பரீட்சைப் பெறுபேறுகளும்

### அரசினர் கலைக் கல்லூரி

**1959 ம் ஆண்டு ஆனி மாதம் 18 ம் திகதி ஆரம்பவிருக்கும் 1959/60 நிர்வாக ஆண்டுக்காய உட்பிரவேசம்**

வரைதலும் வர்ணம் தீட்டலும், சிற்பம், சித்திரக் கைப்பணிகள் வட இந்திய சங்கீதம், கண்டிய நடனம் ஆகிய பாட முறைகளில் பயிலுவதற்கு உட்பிரவேசிக்க விரும்புவோரின் விண்ணப்பப்பத்திரங்கள் 1959 ம் ஆண்டு பங்குனி மாதம் 31 ம் திகதிவரையும் ஏற்றுக்கொள்ளப்படும். அத்திகதிக்குப்பின் கிடைக்கப்படும் விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும். குறிக்கப்பட்ட விண்ணப்பப் பத்திரங்களிலேயே விண்ணப்பித்தல் வேண்டும். விண்ணப்பப்பத்திரங்களும், பல்வேறு பாடமுறைகளைப்பற்றிய விபரம் அடங்கிய கைநூல்களும் அரசினர் கலைக் கல்லூரி, கோட்டன் பிளேஸ், கொழும்பு 7 என்ற எமது காரியாலயத்திலிருந்து பங்குனி மாதம் 1 ம் திகதி முதல் 31 ம் திகதி வரையும் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்பப்பத்திரங்களையும், விபரங்கள் அடங்கிய கைநூல்களையும் இதுவரை எழுத்துமூலம் வேண்டியவர்களுக்கு வருகிற பங்குனி மாதத்தில் அனுப்புவிக்கப்படும். ஒரு விண்ணப்பக்காரர் ஒரு பாடமுறையைத் தவிர தான் விரும்பும் வேறு பாடங்களையும் விண்ணப்பஞ் செய்து கொள்ளலாம். ஆனால் வெவ்வேறு விண்ணப்பப்பத்திரங்களில் விண்ணப்பிக்க வேண்டும்.

டேவிற் பெயின்ரர்,
பதில் அதிபர்.

அரசினர் கலைக்கல்லூரி,
கோட்டன் பிளேஸ்,
கொழும்பு 7,
1959.1.26.

---

## கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

### உணவுப் பகுதி

1959 ம் ஆண்டு மார்ச் மாதம் முதலாந் தேதி துவக்கம் 1959 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 30 ஆம் தேதிவரையுள்ள காலப் பகுதிக்குக் கீழே காணப்படும் சேவைகளுக்கான கேள்விப் பத்திரங்கள், தபால் பெட்டி இலக்கம் 564, யூனியன் பிளேஸ், கொழும்பு என்னும் விலாசத்தையுடைய விவசாய உணவு அமைச்சின் கேள்விச் சபை அக்கிராசனரால், பெப்ரவரி மாதம் 11 ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 2.30 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

சேவை : பால் மாவு உட்பட பல உணவுப் பொருள்களைப் பூசாவிலுள்ள உணவுக் கட்டுப்பாட்டுப் பண்டசாலையிலிருந்து சப்ளை நிலையத்துக்கும் அல்லது பின்வரும் வட்டாரங்களிலுள்ள கூட்டுறவுச் சங்கங்களுக்கும் லொரி மூலம் ஏற்றிச் செல்லுதல்.

வட்டாரம் 1 : அம்பலாங்கொடை, காலி, வெல்லபொடைப்பற்று, இந்துருவ, பி. டபிள்யூ. கே. மேற்கு, இக்கடுவை, வத்தகமை முதலியன.

வட்டாரம் 2 : காலி, எல்பிட்டி முதலியன.

வட்டாரம் 3 : அகங்கமை, வெலிகமை முதலியன.

கேள்விப்பத்திரங்கள், கொழும்பு யூனியன் பிளேசிலுள்ள உணவு அதிகாரியின் காரியாலயத்தினால் 1959 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 9 ஆம் தேதி திங்கட்கிழமை நண்பகல் 12 மணிவரை வழங்கப்படும் மாதிரிப் பத்திரங்களில் இரண்டு பிரதியில் அனுப்பப்படவேண்டும். கேள்விப் பத்திர மாதிரிப் பத்திரங்கள் பெறவிரும்புவோர் முதலில் உணவு அதிகாரி பேரில் 100 ரூபா கட்டுக்காசு கட்டி அதற்கான பற்றுச் சீட்டைக் காட்டவேண்டும். மேலும் விபர விளக்கத்தின் நாலாவது சரத்தின் 4 (ii) ஆம் (iii) ஆம் நிபந்தனைகளுக்கு இணங்கியிருக்க வேண்டும். இதுபற்றிய மேலதிக விபரங்களை உணவு அதிகாரியின் கந்தோரில் பெற்றுக்கொள்ளலாம்.

கே. எம். டி. ஜயனெட்டி,
உணவு அதிகாரி.

330, யூனியன் பிளேஸ்,
கொழும்பு, 24 ஜனவரி, 1959.

---

### வித்தியா பகுதி

**ஆங்கில பாடப் புத்தகங்கள் விநியோகஞ் செய்வதற்கான கேள்விப் பத்திரங்கள்—1958/59**

ஆங்கில பாடப் புத்தகங்கள் விநியோகஞ் செய்வதற்கான, கேள்விப் பத்திரங்கள் 1959 ம் ஆண்டு பெப்ருவரி மாதம் 20 ந் திகதி வெள்ளிக் கிழமை பி.ப. 2.30 மணிவரை கொழும்பு 2, மலாய் வீதியிலுள்ள வித்தியா பகுதி கேள்விச் சபைத் தலைவரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. கேள்விப் பத்திரங்களை அனுப்ப எண்ணுவோர் " வித்தியாதிபதி (விநியோகக் கிளை), வித்தியா பகுதி, மலாய் வீதி, கொழும்பு 2 " என்ற விலாசத்துக்கு விண்ணப்பஞ்செய்து வேண்டிய விபரங்களை இலவசமாய்ப் பெற்றுக்கொள்ளலாம்.

3. கேள்விப் பத்திரங்களை அனுப்ப விரும்புவோரில் கொழும்பிலுள்ளவர்கள் கொழும்பு 2, மலாய் வீதியிலுள்ள வித்தியா பகுதிக் கணக்குக் கிளையிலும், கொழும்புக்கு வெளியேயுள்ளவர்கள் ஆங்காங்குள்ள கச்சேரியிலும், ரூ. 100 கட்டியதாகப் பற்றுச் சீட்டைக் காட்டி, 1959 ம் ஆண்டு பெப்ருவரி மாதம் 19 ந் திகதிவரை சாதாரண வேலை நேரத்தில் கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

எல். டி. எஸ். கருணரத்தினா,
வித்தியாதிபதிக்காக.

வித்தியா பகுதி,
மலாய் வீதி, கொழும்பு 2,
1959 ம் ஹூ ஜனவரி மீ 27 ந் உ.

---

### வித்தியா பகுதி

**தமிழ்ப் பாடப் புத்தகங்கள் விநியோகஞ் செய்வதற்கான கேள்விப் பத்திரங்கள்—1958/59**

தமிழ்ப் பாடப் புத்தகங்கள் விநியோகஞ் செய்வதற்கான கேள்விப் பத்திரங்கள் 1959 ம் ஆண்டு பெப்ருவரி மாதம் 20 ம் திகதி வெள்ளிக் கிழமை பி.ப. 2.30 மணிவரை கொழும்பு 2, மலாய் வீதியிலுள்ள வித்தியா பகுதி கேள்விச் சபைத் தலைவரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. கேள்விப் பத்திரங்களை அனுப்ப எண்ணுவோர் " வித்தியாதிபதி (விநியோகக் கிளை), வித்தியா பகுதி, மலாய் வீதி, கொழும்பு 2 " என்ற விலாசத்துக்கு விண்ணப்பம் செய்து வேண்டிய விபரங்களை இலவசமாய்ப் பெற்றுக்கொள்ளலாம்.

3. கேள்விப் பத்திரங்களை அனுப்ப விரும்புவோரில் கொழும்பிலுள்ளவர்கள் கொழும்பு 2, மலாய் வீதியிலுள்ள வித்தியா பகுதிக் கணக்குக் கிளையிலும், கொழும்புக்கு வெளியேயுள்ளவர்கள் ஆங்காங்குள்ள கச்சேரியிலும் ரூ. 100 கட்டியதாகப்பற்றுச் சீட்டைக் காட்டி, 1959 ம் ஆண்டு பெப்ருவரி மாதம் 19 ந் திகதிவரை சாதாரண வேலை நேரத்தில் கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

எல். டி. எஸ். கருணரத்தினா,
வித்தியாதிபதிக்காக.

வித்தியா பகுதி,
மலாய் வீதி, கொழும்பு 2,
1959 ம் ஹூ ஜனவரி மீ 27 ந் உ.

## ஏல விற்பனவு

### கிருஷிக இலாகா

1959 ம் ஆண்டு மாசி மாதம் 20 ம் திகதி காலை 10 மணிக்கு கீழ்க் காணும் கழிக்கப்பட்ட எருதுகள் பரந்தன் அரசாங்கப் பண்ணையில் விற்கப்படும்.

2 இளைவை எருதுகள்.

கூடிய கேள்வியாளர் உடன் பணத்தை கொடுத்து மிருகங்களை அப்புறப்படுத்தவேண்டும்.

எம். எப். சந்திரரத்தின,
கிருஷிக அதிபர்.

பேராதனை,
1959 ம் ஆு தை மீ 23 ந உ.

## விளம்பரம்

1959 ம் ஆண்டு மாசி (பெப்ருவரி) மாதம் 4 ந் திகதி புதன்கிழமை அரசாங்க விடுமுறையாக விருப்பதால், 1959 ம் ஆண்டு மாசி (பெப்ருவரி) மாதம் 6 ந் திகதி வெளிவரவிருக்கும் இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்படவேண்டிய சகல விளம்பரங்களும் அறிவித்தல்களும் 1959 ம் ஆண்டு மாசி (பெப்ருவரி) மாதம் 2 ந் திகதி திங்கட்கிழமை பி. ப. 4 மணிக்கு முன்னர் அரசாங்க அச்சகத்திற்கு வந்துசேரவேண்டுமென இத்தால் தெரிவிக்கப்படுகின்றது.

பேர்ணுர்ட் த சில்வா,
அரசாங்க அச்சகத் தலைவர்.

அரசாங்க அச்சகம்,
கொழும்பு.
1959 ம் ஆண்டு தை (ஜனவரி) மாதம் 16 ந் திகதி.

இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது